# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

## பத்தாம் வகுப்பு – பொதுத் தேர்வு – மார்ச் / ஏப்ரல் 2016

## தமிழ் முதல் தாள் – விடைக்குறிப்பு

மொத்த மதிப்பெண்கள் : 100

பிரிவு – I (மதிப்பெண்கள் : 20)

| பகுதி – 1 | | 6 x 1 = 6 |
|---|---|---|
| I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | | |
| 1 | (அ) அப்பூதியடிகளார் | 1 |
| 2 | (ஆ) ஊதியம் | 1 |
| 3 | (ஆ) எட்டுத்தொகை | 1 |
| 4 | (இ) பெரியார் | 1 |
| 5 | (இ) பேச்சுக்கலை | 1 |
| 6 | (ஆ) மருதம் | 1 |

| பகுதி – 2 | | 6 x 1 = 6 |
|---|---|---|
| II. கோடிட்ட இடத்தை நிரப்புக | | |
| 7 | திருவள்ளுவமாலை | 1 |
| 8 | சடையப்ப வள்ளல் | 1 |
| 9 | புலி | 1 |
| 10 | மூன்றாம் | 1 |
| 11 | சிரவண பிதுர்பத்தி | 1 |
| 12 | சித்த மருத்துவம் | 1 |

| பகுதி – 3 | | 4 x 1 = 4 |
|---|---|---|
| III. பொருத்துக | | |
| 13 | சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள் | 1 |
| 14 | நற்றிணை – மிளைகிழான் நல்வேட்டனார் | 1 |
| 15 | நல்லேர் – நாற்கரணங்கள் | 1 |
| 16 | பூத்தது மானுடம் – சாலை. இளந்திரையன் | 1 |

| பகுதி – 4 | | 4 x 1 = 4 |
|---|---|---|
| IV. விடைக்கேற்ற வினா அமைக்க (ஏற்ற வினா அமைத்திருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | | |
| 17 | சித்தார்த்தா உயர்கல்வி நிலையம் எங்கு உருவாக்கப்பட்டது ? | 1 |
| 18 | திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது ? | 1 |
| 19 | இராமலிங்கர் இறவாத நிலை தரும் மொழி எது எனக் கருதினார் ? | 1 |
| 20 | சங்க காலத்தில் பெண்கள் எதைக் கடந்து செல்லக் கூடாது ? | 1 |

பிரிவு – II (மதிப்பெண்கள் : 20)

| பகுதி – 1 | | |
|---|---|---|
| V. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் | | 5 x 2 = 10 |
| 21 | ❖ ஊக்கமுடையான் ஒடுக்கம், ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்குவதற்கு முன்னர் பின்வாங்கும் தன்மையைப் போன்றது. | 2 |



388-57—1

| | | |
|---|---|---|
| 22 | ❖ ஏலாதியை இயற்றியவர் - கணிமேதாவியார் (கணிமேதையார்)<br>❖ சமண சமயத்தவர்.<br>❖ காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு.<br>❖ திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார். | ½<br>½<br>½<br>½ |
| 23 | ❖ இராமன் குகனிடம் கூறியது. | 2 |
| 24 | ❖ மூத்த திருநாவுக்கரசு, வாழையின் இளங்குருத்தை அரியும்போது, பாம்பொன்று அவன் உள்ளங்கையில் தீண்டியது.<br>❖ பாம்பின் விடம் ஏறியதால் அவன் இறந்தான். | 1<br>1 |
| 25 | ❖ அறம்<br>❖ பொருள்<br>❖ இன்பம்<br>❖ வீடு. | ½<br>½<br>½<br>½ |
| 26 | ❖ அரசுரிமையால் வந்த பொருள்<br>❖ மக்கள் வரியாகத் தரும் பொருள்<br>❖ பகைவரை வென்றுகொண்ட திறைப்பொருள் | 2 |
| 27 | ❖ மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பெற்றது. | 2 |

| பகுதி – 2 | | |
|---|---|---|
| VI. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் | | 5 x 2 = 10 |
| 28 | ❖ இயல், இசை, நாடகம் எனும் முப்பிரிவுகளைக் கொண்டது.<br>❖ தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.<br>❖ திருக்குறள், மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்தளித்தது.<br>❖ பழமையும், பெருமையும் வாய்ந்தது.<br>❖ இறவாத இலக்கிய, இலக்கணவளங்கொண்டது.<br>❖ தனக்கெனத் தனி நோக்கும் போக்கும் கொண்டது.<br>(ஏதேனும் இரண்டு எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | 2 |
| 29 | ❖ ஒரு மொழிப்பாடத்தை மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறை. | 2 |
| 30 | ❖ யானைத்தந்தம்<br>❖ மயில் தோகை<br>❖ வாசனைப்பொருள்கள் | 2 |
| 31 | ❖ ஞாலம் என்னும் தமிழ்ச்சொல் 'ஞால்' என்னும் சொல்லடியாகப் பிறந்தது<br>❖ 'ஞால்' என்பதற்குத் 'தொங்குதல்' என்பது பொருள். | 1<br>1 |
| 32 | ❖ அன்பு<br>❖ உண்மை<br>❖ உறுதி<br>❖ இன்னா செய்யாமை | ½<br>½<br>½<br>½ |
| 33 | ❖ சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். | 2 |
| 34 | ❖ B.Lit., - இளங்கலை இலக்கியம்<br>❖ B.A., - இளங்கலை | 1<br>1 |

பிரிவு – III (மதிப்பெண்கள் : 24)

| பகுதி – 1 | | |
|---|---|---|
| VII. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் | | 3 x 4 = 12 |
| 35 | ❖ கொற்கை என்னும் துறைமுகத்தை உடைய பாண்டிய மன்னனே வாழ்க!<br>❖ தெற்குப் பகுதியில் உள்ள பொதிய மலைக்குத் தலைவனே வாழ்க!<br>❖ செழியனே வாழ்க! தமிழ்நாட்டின் தென்பகுதித் தலைவனே வாழ்க!<br>❖ இதுவரை பழிச்சொற்கள் சேராத பஞ்சவனே வாழ்க! | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 36 | ❖ இராமனது வரலாற்றைக் கூறும் நூல்<br>❖ வடமொழியில் வான்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பரால் தமிழில் இயற்றப்பட்டது.<br>❖ கம்பர் தமது நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.<br>❖ பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் ஆறு காண்டங்களை உடையது. | 1<br>1<br>1<br>1 |
| 37 | ❖ பொன்னும், பவளமும், முத்தும், பெருமலையில் பிறக்கும் மாணிக்கமும் தோன்றும் இடங்களால் ஒன்றுக்கொன்று தொலைவில் உள்ளன.<br>❖ இவற்றை மாலையாகக் கோத்து மதிப்புமிக்க அணிகலனாக அமைக்கும் போது, தம்முள் ஒருங்கு சேரும்.<br>❖ அதுபோல, சான்றோர் என்றும் சான்றோர் பக்கமே இருப்பர். | 2<br>1<br>1 |
| 38 | ❖ தன் வாலை வளைத்தது.<br>❖ பெரிய தலையை தாழ்த்தியது.<br>❖ தனது உடல் நடுங்குமாறு மெல்ல மெல்ல நடந்து வந்தது.<br>❖ முகமது நபியின் திருவடிகளைப் பணிந்து வணங்கி நின்றது. | 1<br>1<br>1<br>1 |
| 39 | ❖ கல்லும் முள்ளும் உள்ள மலைப்பகுதியைக் கடப்பதற்கு இரண்டு கால்கள் உடையவன் நீ.<br>❖ நடக்கும் பாதையில் வளரும் புதர்களை அழிப்பதற்கும் உனக்கு இரு கைகள் உள்ளன.<br>❖ செல்லும் வழியில் முன்னேறிச் செல்வதற்குக் கண்களும் காதுகளும் துணையாக உள்ளன.<br>❖ இவற்றுடன் மன உறுதியும் இருந்தால் விண்ணையும் கடந்து வெற்றி கொள்ளும் வழியைக் காணலாம். | 1<br>1<br>1<br>1 |

| பகுதி – 2 | | |
|---|---|---|
| VIII. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் | | 3x 4 = 12 |
| 40 | ❖ வீட்டில் பெண்களை முடக்கி வைத்து, நாட்டுநடப்பை அறியவிடாமல் செய்வது.<br>❖ சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய பெரிய மாறுதல்களைக் கொண்டுவரவியலா.<br>❖ பெண்கள் மனிதப் பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு அவர்களை வெளியேற்ற வேண்டும்.<br>❖ பெண்கள் கல்வி கற்றால் ஒழிய சமூக மாற்றங்கள் ஏற்படா. உலகப்படிப்பும்,ஆராய்ச்சிப்படிப்பும் தாராளமாய்க் கொடுக்கவேண்டும். | 1<br>1<br>1<br>1 |
| 41 | ❖ அம்பேத்கர் 1946 ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.<br>❖ இவரது அரிய முயற்சியினால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. | 2<br>2 |
| 42 | ❖ பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல்.<br>❖ உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல்.<br>❖ பாராட்டி முடித்தல்.<br>❖ பொருத்தமான கவிதையைக் கூறிமுடித்தல். | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 43 | ❖ பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர்.<br>❖ "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்கிறது குறள்.<br>❖ தமிழர் உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் உழவரைப் போற்றினர்.<br>❖ "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்னும் புகழ் மொழி இன்றும் போற்றப்படுகிறது.<br>❖ மருத நிலம் உழவுக்குச் சிறப்பு பெற்றது.<br>❖ மருதநிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர்<br>(ஏதேனும் நான்கு) | 1<br>1<br>1<br><br>1 |
| 44 | ❖ தென்னாப்பிரிக்காவில் இந்தியர்க்கு எதிரான கறுப்புச் சட்டங்களைக் காந்தியடிகள் கொளுத்தினார்.<br>❖ காந்தியடிகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் அவர் செருப்புத் தைத்தார்.<br>❖ விடுதலை அடைந்ததும், தன்னைச் சிறையில் அடைத்த ஆளுநர் ஸ்மட்ஸ்க்கு தாம் தைத்த காலணிகளை வழங்கினார்.<br>❖ வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது தீயைத் தீயால் அணைக்க முற்படுவது போன்றது. நெருப்பை நீரால்தான் அணைக்க முடியும் என்று கூறினார். | 1<br>1<br>1<br>1 |

பிரிவு – IV (மதிப்பெண்கள் : 10)

| | | |
|---|---|---|
| IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக | | 5 x 1 = 5 |
| 45 | (i) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்<br>(ii) குலசேகர ஆழ்வார்<br>(iii) பாணோக்கா, தாணோக்கா, கோணோக்கி<br>(iv) பற்று + அல்லால்<br>(v) மாலையணிந்த அரசன் | 1<br>1<br>1<br>1<br>1 |
| 46 | கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க | 5 x 1 = 5 |
| | (i) தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்குவது.<br>(ii) தொல்காப்பியம்<br>(iii) அகத்தியர்<br>(iv) எழுத்து, சொல், பொருள்.<br>(v) அகத்தியம் | 1<br>1<br>1<br>1<br>1 |

பிரிவு – V (மதிப்பெண்கள் : 26)

பகுதி – 1 2 x 8 = 16

X. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்

| | | | | |
|---|---|---|---|---|
| 47 (அ) | இராமன் | : | இங்கே அமர்க. | |
| | குகன் | : | "தேவர்க்கு நல்லுணவாக அமையும்படி தேனையும், மீனையும் பக்குவப்படுத்திக் கொண்டுவந்துள்ளேன். இதனை ஏற்றுக் கொள்வீராக". | 1 |
| | இராமன் | : | உள்ளத்தில் கொண்ட அன்பின் மிகுதியால் குகன் கொண்டுவந்த இப்பொருள்கள் கிடைத்தற்கரியன. அமுதத்தைவிடச் சிறந்தன. இவை அனைத்தும் தூய்மையானவையே. எம்போன்றோர்க்கும் உரியன. ஆகையால், இனிமையான இவ்வுணவு நாங்கள் விரும்பி உண்டதற்குச் சமம். | 2 |
| | குகன் | : | இவ்வுலகம் அனைத்திற்கும் செல்வம் போன்றவனே! தங்களை இத்தவக்கோலத்தில் பார்த்த என்னிரு கண்களையும் எடுக்க முடியாத நிலையில் உள்ள கள்வன் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நான். இந்த மனத்துயரத்தோடு எனது இருப்பிடம் செல்லத்துணியேன். ஐயனே, உடனிருந்து தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன். | |
| | இராமன் | : | (சீதையையும், தம்பி இலக்குவனையும் பார்த்து) இவன் நம்பிடத்து நீங்கா அன்புடையவன். என் இனிய நண்பனே! இவ்விடத்தில் எம்மோடு இருப்பாயாக! | 1 |
| | | | (படகைக் கொண்டு வந்து அதில் இராமனையும், இலக்குவனையும், சீதையையும் படகில் ஏற்றி படகை அன்னம் போல் மெதுவாகச் செலுத்தினான்) | 1 |
| | இராமன் | : | என் உயிர் போன்றவன் நீ; இலக்குவன் உன் தம்பி; சீதை உன் கொழுந்தி; நீர் சூழ்ந்த இந்நிலவுலகம் முழுவதும் உன்னுடையது. நான் உனது ஆருகைக்குரியவன். துன்பம் ஏற்படும்போது அதனையடுத்து இன்பம் தோன்றுவது இயற்கை. இப்பிரிவிற்கு வருந்த வேண்டாம். முன்னர் நாங்கள் உடன்பிறந்தோர் நால்வராய் இருந்தோம். விரிந்த அன்பினால் இனி உன்னோடு ஐவரானோம்.<br>(உரையாடல் வடிவம் அன்றி, தொகுத்து எழுதி இருப்பினும் உரிய மதிப்பெண் வழங்கவும்) | 2 |

| | | |
|---|---|---|
| 47 (ஆ) | <u>புலி வசனித்த படலத்தின் கருத்துகள்</u> | |
| | ❖ நபி முகம்மதுவை வணங்கி ஒருவன் புலி இருக்குமிடம் தெரிவித்தல் | 1 |
| | ❖ புலியின் தோற்றம், புலியின் வெறிச்செயல் | 1 |
| | ❖ வனத்தில் வாழும் விலங்குகள் | 1 |
| | ❖ முகம்மது நபி புலியிருக்குமிடம் கேட்டல் | 1 |
| | ❖ முகம்மது நபி வருவதைப் புலி பார்த்தல், முகம்மது நபியை வணங்குதல் | 1 |
| | ❖ முகம்மது நபி, தன் கரத்தினால் புலியைத் தடவுதல் | 1 |
| | ❖ முகம்மது நபியைப் புலி வணங்கிப் புறப்படுதல் | 1 |
| | ❖ முகம்மது நபியின் செயலைக் கண்டோர் வியந்து போற்றுதல் | 1 |

48) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்

| | | |
|---|---|---|
| 48 (அ) | <u>பெண்கள் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறுவன</u><br>1. பெண் கல்வி<br>❖ பெண் கல்வி கற்றால் ஒழிய சமூக மாற்றங்கள் நிகழா.<br>❖ ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும்.<br>❖ அவர்களுக்கு உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும் .<br>❖ பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருப்பது கொடுமை. இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும். | 2 |
| | 2. பெண்ணுரிமை<br>❖ பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும்.<br>❖ ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தவர்.<br>❖ பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமைகளாக இருக்கக்கூடாது.<br>❖ மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ்பெற்ற பெண்மணிகளாக விளங்க வேண்டும். | 2 |
| | 3. சொத்துரிமை<br>❖ பெண்ணடிமைக்கான காரணங்களுள் ஒன்று சொத்துரிமை இல்லாமை.<br>❖ அவர்களுக்குச் சொத்துரிமை வழங்கிவிட்டால் எல்லாவிதமான அடிமைத்தனங்களும் மறைந்துபோகும். | 2 |

| | | |
|---|---|---|
| | 4. அரசுப்பணி<br>❖ அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும்.<br>❖ அரசின் அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் பணியாற்ற வேண்டும். அப்போதுதான் நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றார் பெரியார். | 2 |
| 48 (ஆ) | **தொழிற்கல்வி:**<br>❖ மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியன தொழிற்கல்விப் படிப்புகள் ஆகும்.<br>❖ மேனிலைக் கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் கலந்தாய்வு மூலம் தங்கள் தகுதிக்கேற்ப கல்லூரிகளில் சேர்ந்து படித்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணியாற்றலாம். | 4 |
| | **தொழில் நுட்பக் கல்வி:**<br>❖ பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் தொழில் நுட்பக் கல்வி பெறலாம். பொறியியல் துறையில் உள்ளது போல பல்வேறு துறைகள் இதிலும் உண்டு.<br>❖ மேனிலைக்கல்வி முடித்து, இடைநிலை ஆசிரியர் பயிற்சி இரண்டு ஆண்டுகள் படித்துத் தேர்ச்சிபெற்று இடைநிலை ஆசிரியர் ஆகலாம்.<br>❖ செவிலியர் பயிற்சி, கூட்டுறவுப் பயிற்சியிலும் சேர்ந்து பயிற்சி பெற்று வேலை வாய்ப்பு பெறலாம். | 4 |
| | பகுதி – 2 | (மதிப்பெண்கள்:10) |
| 49 | **செய்யுள் வடிவில் விடை தருக.** | |
| அ) | ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்<br>உயிரினும் ஓம்பப் படும். | 2 |
| ஆ) | இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்,<br>கெடுப்பார் இலானும் கெடும். | 2 |
| இ) | மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை யார்கழற்கென்<br>கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்<br>பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்றும்<br>கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே. | 6 |